# எட்டுத்தொகையில் கற்பு வாழ்க்கை

**முனைவர் வெ.முத்துலட்சுமி**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
ஜி.டி.என் கலைக்கல்லூரி
திண்டுக்கல்

**மலர்:** 3

**இதழ்:** 2

**தொகுதி:** 1

**மாதம்:** அக்டோபர்

**வருடம்:** 2018

**ISSN:** 2454-3993

"களவியலில் மறைந்தொழுகியக் காதலர்கள் திருமணம் புரிந்து வாழ்வது கற்பியலாகும். களவு நெறித் திருமணமாக முடியுமாயின் அதனை நன்னெறி என்பர். களவின் முடிவு கற்பு என்பது அகத்திணை வலியுறுத்தும் அறங்களுள் தலையானதாகும்"[1] என்று செ.மகேஸ்வரி குறிப்பிடுகின்றார். சங்க நூல்கள் எல்லாம் இல்லற வாழ்க்கையைத்தான் ஏற்றமுடையதாகக் கூறுகின்றன. அகப் பொருள் பற்றிக் கூறும் நூல்கள் அனைத்தும் இல்லறத்தைப் பாராட்டிக் கூறுவனவாகும். நாட்டிலே அமைதியும் அரசியலும் இருந்தால்தான் ஒவ்வொரு குடும்பமும் நன்றாக வாழ முடியும். பண்டைத் தமிழர்கள் தனித்தனிக் குடும்பமாகச் சிறந்து வாழ்ந்து வந்தனர். "இல்வாழ்க்கையைத் திறமையுடன் நடத்த வேண்டி முறைப்படி நடத்தினால் அதைக் காட்டிலும் இனிய வாழ்வு இல்லை என்பதை,

**"மனையுறை வாழ்க்கை வல்லியாங்கு மருவின்**
**இனியவும் உளவோ"[2]**

என்ற அடிகள் இவ்வுண்மையைக் காட்டும். இக்கருத்தே 'அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றின் போஒய்ப் பெறுவ தெவன்' என்று திருக்குறளிலே அமைந்து கிடப்பதைக் காணலாம். இந்த இல்லறம் சிறப்பாக நடைபெற வேண்டுமானால் தலைவனும் தலைவியும் கருத்தொருமித்தவர்களாக வாழ வேண்டும். இத்தம்பதிகள் தாம் இல்லறத்திலே இன்பம் காண்பர். இதுவே பழந்தமிழர் கருத்தாகும் என்பதைத் தொல்காப்பியர்,

**"கற்பெனப்படுவது கரணமொடு புணர**
**கொளற்கு உரி மரபின் கிழவன் கிழத்தியை**
**கொடைக்கு உர மரபினோர் கொடுப்ப கொள்வதுவே"[3]**

கற்பு என்று சொல்லப்படுவது விருப்பம் என்று பொருளாகும். ஒத்த மரபை உடையத் தலைவன் தலைவியை மணம் செய்து கொடுத்தற்கு உரிய சுற்றத்தார் கொடுக்க மணம் முடித்துக்கொள்ளுதல் ஆகும் என்று தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார். தொழில் செய்து பொருளீட்டும் காதலனுக்கு, காதலிதான் வாழ்க்கையிலே உற்சாகமூட்டும் உயிராகும். இதைப்போலவே இல்லத்திலே இருந்து கடமையைச் செய்யும் காதலிக்கு, காதலனே இன்பத்தையும் மகிழ்ச்சியையும் ஊட்டும்

உயிராகும். நமது காதலர்தான் இவ்வுண்மையை நமக்குரைத்தார். ஆதலால் தோழியே நீ வருந்தாதே அவர் இப்பொழுது பிரிந்து செல்லமாட்டார். அவராகவே தம் பயணத்தை நிறுத்திவிடுவார் என்பதை,

**"வினையே ஆடவர்க்கு உயிரே வாணுதல்**
**மனைஉறை மகளிர்க்கு ஆடவர் உயிர் என**
**நமக்குரைத் தோரும் தாமே**
**அழா அல் தோழி அழுங்குவர் செலவே"** **(குறுந்.135)**

என்ற பாடல் கணவன் பொருள்தேடப் பிரிந்து செல்வான் என்று எண்ணியத் தலைவிக்கு அவள் தோழி இவ்வாறு சமாதானம் சொல்வதாக அமைந்துள்ளது இப்பாடல். இல்லறத்தில் உள்ள தம்பதிகள் ஒருமனப்பட்டு வாழ்ந்தனர் என்பதற்கு இப்பாடல் உதாரணமாகும் என்பதை,

**"துறந்துஓர் தேஎத்து இருந்து நனிவருந்தி**
**ஆருயர் அழிவதா யினும், நேர் இழை**
**கரத்தல் வெண்டு மால்மற்றே: பரப்புநீர்த்**
**தண்ணந் துறைவன் நாண,**
**நண்ணார் தூற்றும் பழிதான் உண்டே"** **(நற்.382:5-10)**

என்றப் பாடலடிகளின் மூலம் தலைவனைப் பிரிந்த தலைவி ஒரு தனியிடத்திலேயிருந்து வருந்தினாலும் சரி, தனது அருமையான உயிரே போவதாயினும் சரி, சிறந்த ஆபரணங்களை அணிந்த கற்புடைய மகள் தன் துன்பத்தை மறைத்துக்கொள்ள வேண்டும், இல்லை எனில் குளிர்ந்த நீர்த்துறையையுடைய தலைவன் நாணமடையும்படி பகைவரால் இகழப்படும் பழி அவன்மீது அமரும் என்பதை,

**"நாள் இடைப்படின் என்தோழி வாழாள்:**
**தோளிடை முயக்கம் நீயும் வெய்யை:**
**கழியக் காதலராயினும் சான்றோர்**
**பழியொடு வரூஉம் இன்பம் வெ.ஃ.கார்:**
**வரையின் எவனோ வான்தோய் வெற்ப"** **(அகம்.112:9-13)**

என்ற பாடல் கற்பு மணம் புரியவேண்டும் என்று தோழி இப்பாடல் மூலம் கூறுகிறாள். ஒரு தலைவன் தானே தன் நெஞ்சுடன் கூறிக்கொண்டதாக அமைந்துள்ளது. "பண்டைக்காலத்தில் காதலர்கள் எவ்வாறு ஒன்றுபட்டு வாழ்ந்தனர் அவர்களுடைய இல்லற வாழ்வு எவ்வளவு சிறந்திருந்தது"4 என்று சி.இலக்குவனார் குறிப்பிடுகின்றார். பெண்களின் கற்பைப் பற்றிக் கலித்தொகைப் பாடல்கள் பலவற்றிலே காணலாம். சான்றாக,

**"வடமீன்போல் தொழுதேத்த வயங்கிய கற்பினாள்"** **(கலி.2:21)**

என்றப் பாடலடிகளின் மூலம் அறியலாம். அருந்ததியைப்போல எல்லோரும் தொழுது போற்றும்படி விளங்குகினற கற்பினையுடையவள் என்றும் பெண்கள் அருந்ததியைப்போல் பிறர் நெஞ்சு புகாதவர்களாக இருக்கவேண்டும்: மழையைப் பெய்யச் செய்யும் தெய்வீக சக்தி படைத்திருக்க வேண்டும்: முதலில் காதலித்த கணவனைக் கைவிட்டு மற்றொருவனை மணம் புரிந்துகொள்ளுதல் கூடாது. இவை பெண்களின் கடமையாகும் கற்புடைமையாகும் என்றுப் பண்டைத் தமிழர்கள் கருதினர். கற்பொழுக்கத்தில் சிறந்து விளங்கிய கணவனுக்கும், மனைவிக்கும் ஊடல் இயல்பாக ஏற்படுகின்றது. ஊடலைத் தீர்க்கும்பொருட்டுத் தலைவன் பலவாறாக இரங்கிப் பேசித் தலைவியின் ஊடலைத் தணிக்க முற்படுவான். தலைவி மனம் இரங்கி அவனுக்குத் தன்னைத் தந்து மகிழ்கின்றாள். இது கற்புக்காமம் ஆகும். கற்பு புணர்ச்சியில் இன்பத்தைத் துய்க்குமாறு செய்வதை,

**"புலத்தலின் சிறந்தது கற்பே அதுதான்**
**இரத்தலும் ஈதலும் இவை உள்ளீடாப்**
**பரத்தை உள்ளதுவே பண்புறு கழறல்"** **(பரி.9.16-18)**

என்கிறது பரிபாடல். பதிற்றுப்பத்தில் ஒவ்வொரு பதிகங்களின் முகவுரையிலும் அரசியரைப்பற்றிச் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது. இதன் செய்யுள் பலவற்றில் அரசியின் அழகு நலம், குண நலம், கற்புச் சிறப்பு, ஊடற் பண்பு, புதல்வர் பேறு, கணவனின் பெருமை முதலியன விளக்கப்பட்டுள்ளன. களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரலின் மனைவி அருந்ததி போல் கற்புத் திறம் கொண்டவள்(பதிற்.31:27-28) என்று காப்பியாற்றுக் காப்பியனார் கூறியுள்ளார். அவ்வாறே பெருங்குன்றூர் கிழாரும் இளஞ்சேரல் இரும்பொறையின் மனைவி அருந்ததியோடு ஒத்த கற்பினையுடையவள் (பதிற்.16,19,88,89,70) என்று குறிப்பிடுகிறார். இது,

**"மாண்ட என் மனைவியோடு, மக்களும் நிரம்பினர்:**
**யான் கண்டனையர் என் இளையரும்: வேந்தனும்**
**அல்லவை செய்யான், காக்கும்: அதன் தலை**
**ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச்**
**சான்றோர் பலர், யான் வாழும் ஊரே"** **(புறம்.191:3-7)**

என்ற பாடலடிகளில் கூறப்படுகின்றது. "குடும்பத்திற்கு மங்கலமும் நிறைவும் தருவது மனைமாட்சி. அதற்கு அணிகலனாக அமைவது மக்கட்பேறாகும் என்ற குறள் கருத்து இங்கு ஒப்பிடத்தக்கது"5 என்று மு.கருணாநிதி குறிப்பிடுகின்றார். சுற்றத்துடன் கூடி வாழும் இல்வாழ்க்கையே சிறந்த அறநெறி வாழ்க்கை என்பதனை, 'ஒக்கல் வாழ்க்கை தட்கும்மா காலே' (புறம்-193) என்ற பாடல் அடி உணர்த்துகிறது. "கற்புடைய மங்கையர் தெய்வத்தன்மை மிக்கவர் அவர் பிறரை நோக்கிச் சொல்லும் சொல் தவறாது பலிக்கும் இம்மங்கையரை வணங்குவோர் புண்ணியப் பயன் கொள்வர் என்பதை விளக்குவதாக"6 செ.மகேஸ்வரி குறிப்பிடுகின்றார். தலைவன் தன்னைவிட்டுப் பிரிந்து பொருள்தேடச் சென்றாலோ, பரத்தையிடம் சென்று திரும்பினாலோ தலைவியின் மனம் பலவீனமடைகிறது.

### தோழி கூற்று

தலைவியின் வாழ்வு முழுவதும் அன்பின் அடிப்படையாகவே அமைவதால் அகப்பாடல்கள் அன்பின் ஐந்திணை ஆயிற்று. ஐந்திணைப் பாகுபாட்டின் அடிப்படையில் தலைவியின் பண்பு உணர்த்தப்படுகின்றது. ஒவ்வொரு திணைக்கும் ஏற்றாற்போல் தலைவன் பிரிவதும், அதைக் கண்டு தலைவி வருந்துவதும், தோழி தேற்றுவதுமாகச் சில மாற்றங்கள் பற்றியும் கூறப்படுகின்றன. அகநானூற்றில் குறிஞ்சி நிலத் தலைவன் ஒருவன் தலைவி ஒருத்தியை இரவில் கூடி மகிழ்வதை வழக்கமாக்கிக் கொள்கிறான். இரவு நேரத்தில் தலைவன் வரும் வழியோ மிகவும் அச்சம் தருவதாய் கொடிதாய் இருக்கிறது. இவன் கடந்து வரும் காட்டாற்றில் முதலைகள் பல உலவுகின்றன; நீர்ச்சுழிகள் பல இருக்கின்றன. மதம்கொண்ட யானை ஒன்று அந்தப் பக்கம் பல நாள்களாகத் திரிந்து கொண்டிருக்கிறது. அந்த ஆற்றங்கரையில் அணங்குகள் வேறு உறைகின்றன. இப்படிப்பட்ட சூழ்நிலையில் தலைவியைத் தலைவன் சந்திக்க வருவதை நினைத்துத் தோழி மனவருத்தப்படுகிறாள். அதனால் இனியும் நாள் கடத்தாமல் திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்பதைச் சூசகமாகத் தோழி தெரிவிக்கிறாள். இதை,

**"யாமத்து**
**ஈங்கும் வருபவோ? ஓங்கல் வெற்ப!**
**ஒரு நாள் விழுமம் உறினும் வழிநாள்,**
**வாழ்குவள் அல்லள் என் தோழி: யாவதும்**
**-----------------------------------------**
**உலமரல் வருத்தம் உறுதும் எம்படப்பைக்**
**கொடுந்தேன் இழைத்த கோடுயர் நெடுவரை**
**பழம்தூங்கு நளிப்பிற் காந்தளம் பொதும்பில்**
**பகல்நீ வரினும் புணர்குவை**
**……….. தடமென் தோளே!"** **(அகம்.18:7-18)**

என்ற பாடலின் மூலம் தலைவன் இரவில் வருதலைத் தவிர்த்து பகலில் வரலாம் என்றாலும், மலைப்பக்கத்தில் தேன் எடுப்போரும், பழம் பறிப்போரும் உலாவிக் கொண்டிருப்பார்கள் ஆதலால் தலைவியைத் திருமணம் செய்துகொள்ளுமாறு தோழி கூறுகிறாள். கலித்தொகை 133ஆம் பாடலில் தோழி இதே கருத்தை நேரடியாகவே தலைவனுக்கு எடுத்துரைக்கிறாள். பொருள் ஈட்டுவதன் பொருட்டுத் திருமணம் செய்துகொள்ளாமலேயே தலைவியைப் பிரியக் கருதியிருக்கிறான் தலைவன். தலைவன் பிரிவை அவன் தவிர்க்க வேண்டும் என்பதை வலியுறுத்தும்விதமாகத் தோழி கூறுவதாக,

**“நோம் என் நெஞ்சே நோம் என் நெஞ்சே**
**இமை தீய்ப்ப பன்ன கண்ணீர்த் தாங்கி”** **(கலி.133:2-3)**

என்ற பாடலில் நெய்தல் நிலத்தலைவியின் உள்ளத்து வெளிப்பாடு அமைவதை அறியமுடிகிறது. தலைவன் பிரிந்து சென்ற வருத்தத்தில் இருக்கும் தலைவியிடம் தோழி ஆறுதல் கூறாமல் இருப்பதால் தலைவியின் துன்ப வெளிப்பாடு வெளியில் தெரிகிறது. இரவுப் பொழுதில் எல்லா உயிரினங்களும் உறங்கிக்கொண்டிருக்கும் வேளையில் தலைவி மட்டும் உறங்காமல் துன்புறுகிறாள். மாலைப் பொழுது வந்ததும் தலைவன் வராததைக் கண்டு ‘அரக்கால் செய்த பாவை வெயிலில் உருகுவதைப் போல’ தலைவியின் உடல் உருகி நிற்கின்றது. தலைவன் பிரிந்த சூழலில் தலைவி வருந்துவது இயல்பு. அச்சூழலில் அன்று இரவு கனவினால் தலைவனைக் கண்டு மகிழ்ந்து, பின் கனவு பொய் என அறிந்து வருந்தினாள். தலைவனை நினைத்து உருகும் தலைவியின் துன்ப நிலையை,

**“ஒருநாள் நம்இல் வந்ததற்கு எழுநாளட**
**அழுப என்ப அவன் பெண்டிர்”** **(ஐங்.32:2-3)**

என்றப் பாடலடிகள் எடுத்துக்காட்டுகின்றன. தலைவியின் மனவருத்தத்தைப் போக்குபவள் தோழி. தலைவிக்கு ஏதாவது பிரச்சினை நேர்ந்தாலோ இல்லை தலைவனைக் காணாமல் வருத்தப்பட்டாலோ தோழியுடைய மனதையும் பாதிக்கும். தலைவியை தலைவனிடம் சேர்க்க வேண்டும் பிரிந்து செல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று நினைத்துத் தோழி தலைவிக்கு உதவியாக இருப்பாள்.

### செவிலி கூற்று

செவிலி கூற்றுப் பாடல்களில் குறுந்தொகை முல்லைத் திணையில் ஒரே ஒரு பாடலில் இறைச்சி அமைந்துள்ளது. காட்டுக் கோழியும் அதனுடைய சேவலும் கருப்பொருளாக வந்து இறைச்சி அமைக்கப்பட்டுள்ளது. கற்புக் காலத்துக் கடிநகர் சென்ற செவிலித்தாய் நற்றாய்க்குச் சொல்லியதாக அமைந்துள்ளது பாடல்.

**“கானங் கோழிக் கவர்குரல் சேவல்**
**நண்பொறி எருத்தில் தன்சிதர் உறைப்பப்**
**புதல்நீர் வாரும் பூநாறு புறவில்**
**சீறூரோளே, மடந்தை வேறுஊர்**
**வேந்துவிடு தொழிலோடு செலினும்**
**சேந்து வரல் அறியாது, செம்மல் தேரே”** **(குறுந்.242)**

என்ற பாடலடிகள் காட்டுக்கோழியின் செயல் தலைவன் தலைவியும் கூடி மயங்கி வாழ்வதைக் குறிப்பிடுகின்றது. செவிலியின் உதவியால் திருமணம் கைகூடும் நிலை உருவாயிற்று. அதனால் மகிழ்ந்த தோழி தன் தாயைப் பாராட்டி அன்னையே, கானவர் வள்ளிக்கிழங்கும், கவலைக் கிழங்கும் தோண்டியெடுப்பது வழக்கமாதலின் அங்ஙனம் தோண்டியமையால் உண்டான குழிகள் நிறையுமாறு வேங்கை மலர்கள் நிறைந்தன என்றால் அதைப்போல மாரிக்காலத்தே மழைமுகில் படிதலால் தலைமறைவது இயல்பாகும். தான் நோக்கி மகிழ்ந்த தலைவன் மலையை மழைமேகன் மறைந்த பொழுது தலைவி வருத்தமுற்று அழுதாள்.

அம்மலையைக் கண்டபோது அம்மலைக்குரிய தன்காதலனைத் தழுவும் இன்பத்தை அடைந்தவளாதலின் அது மறைந்தபொழுது அவன் தழுவலை இழந்தவளாக வருந்தினாள்.

காவல்மிக்க இல்லறத்திற்குச் சென்றுவந்த செவிலி மகிழ்ந்த உள்ளத்தவளாக நற்றாய்க்குச் சொல்லியதாகச் செவிலித்தாய் அல்லவை கடிதலும் நல்லவை கூறலும் தலைமகளுக்கன்றி நற்றாய்க்கும் அறிவுரை கூறுபவளாக இருக்கின்றாள் என்பதை ஐங்குறுநூறு 401வது பாடல் வழி கூறப்படுகிறது. பிறந்த நாள் முதல் தலைவியைச் சிறப்பாக வளர்த்து வருபவள் செவிலி. இவளே தலைவியின் உயிர்த்தோழியை ஈன்றெடுத்தவள். நற்றாய்க்குத் தோழியாக இருப்பவள். தாய்க்குத் தாயாகக்கொண்டு உயிர் ஒன்றாய் வருகின்றாறென்று ஆராய்ந்து துணியப்பெற்ற பெருஞ்சிறப்புக் காரணமாகக் கூறுவதற்குரிய மறைப்பொருளெல்லாம் குறிப்பால் அன்றி கூற்றால் கூறத்தக்கவளாதலின் தாயெனச் சிறப்பித்துச் சொல்லப்படுபவள் செவிலியேயாவாள்.

ஐங்குறுநூற்றில் பாலைத்திணையில் இடம்பெறும் மகட்போக்கிய வழித் 'தாயிரங்கு பத்து' என்றத் தலைப்பில் வரும் பத்துப் பாடல்களில் தலைவனுடன் உடன்போக்கு மேற்கொண்ட தலைவியை நினைத்து வருந்தும் செவிலி, நற்றாய் இவர்களின் பல்வேறு உணர்ச்சி நிலைகளைக் காணலாம். தலைவி, தலைவனுடன் சென்ற பிறகு தன் மகள் தோழியை வெறுத்துத் தமக்கு ஆறுதல் கூறித் தேற்றுவார்க்குச் செவிலிக் கூறியது பின்வரும் பாடலில் அமைந்துள்ளது.

**"அத்த நீனிடை அவனொடு போகிய**
**முத்தேர் வெண்பகல் முகில்நடை மடவரல்**
**தாயரென்னும் பெயரே வல்லாறு**
**எடுத்தேன் மன்ற யானே" (ஐங்.88:1-4)**

எனும் பாடற்கருத்திற்கேற்ப, ஒருவர் நற்பெயர் எடுக்க வேண்டுமாயின் ஆற்றலான் முயன்று எடுத்தல் வேண்டுமன்றே அவ்வாறே நானும் அரிதில் முயன்று இன்னானோடு ஓடிவிட்ட இன்னவள் தாய் என்னும் பெயரை எடுத்துள்ளேன் என்று இகழ்ச்சிக் குறிப்பால் மனம் நொந்து கூறினாள். ஊரார் எங்களைப் பழித்தூற்றுவார்களே என்று நினைத்துச் செவிலியின் மனம் பலவீனமாகக் காணப்படுகிறது.

**அன்னையின் அன்பு**

களவு மணத்திலே ஈடுபட்டிருந்தாள் ஒரு பெண். அவள் தன் காதலனுடன் புறப்பட்டுத் தலைவன் ஊருக்குப் போய்விட்டாள். இச்செய்தியை அறிந்த தலைவியின் தாய் வருந்தினாள். ஆயினும் அவள் மகளுடைய செய்கையை வெறுக்கவில்லை. சங்ககாலத்திலே கருத்தொருமித்த காலர்கள் இருவர் தங்கள் விருப்பப்படி மணம் புரிந்துகொண்டதைக் காணலாம். இத்தகைய மணத்தை அக்காலத்து மக்கள் ஆதரித்து வந்தனர். இருவரும் ஒன்று சேர்ந்து போன பிறகுதான் அவர்கள் மணம் புரிந்து கொண்ட செய்தி, ஊரார்க்கு வெளிப்பட்டது. ஊரார் அறியாமல் அவர்கள் மணவாழ்வு நடத்தி வந்தது களவுமணமாகும். ஊரார் அறியும்படி இருவரும் ஒன்றுசேர்ந்து போனது கற்புமணமாகும். இப்படிச் சென்ற தம்பதிகள் தன்வீட்டுக்குத் திரும்பி வரவேண்டும் என்று தாய் வேண்டிக்கொள்வதாக ஐங்குறுநூறு 391ஆம் பாடல்வரிகள் குறிப்பிடுகின்றன. "தலைமகள் தன்காதலனுடன் ஊரறியா வண்ணம் உடன்போக்கில் ஈடுபடுகிறாள். அதையறிந்தத் தாய் அவனைத் தேடியும் காணாது மனம் வேதனைப்படுகிறாள். மகளின் பிரிவுத்துயரை அவள் விட்டுச் சென்ற பொருள்கள் நினைவுபடுத்துவதாகத் தாயின் உளவியல் அமைந்துள்ளது"7 என்று சாமி.சிதம்பரனார் குறிப்பிடுகின்றார்.

**நற்றாய் கூற்று**

அகப்பொருள் இலக்கியங்களில் இடம்பெறும் நற்றாய் தலைவியைப் பெற்றெடுத்தவள். அக இலக்கியங்களில் நற்றாயின் பங்கு குறைவாகவே காணப்பெறுகின்றது. இவள் தன்மகளின் களவொழுக்கத்தைக் கேள்வியுற்றதும் அக்களவொழுக்கத்தின் போக்கையும் தன் மகள் தேர்ந்தெடுத்த தலைவனுடைய பொருத்தத்தையும் தன் தோழியாகியச் செவிலியுடன் ஆராய்ந்து வருவாள். தலைவனுடன் உடன்போக்கு மேற்கொண்டாள் தலைவி. வழியில் செல்பவர்களைப் பார்த்து என் தோள்களை விரும்பிப் பாராட்டிய தலைவனுக்கு மணம்செய்து கொடுப்பதை மறுத்து என்னைக்கெடுத்த, அறம் இல்லாத அன்னையைக் கண்டால், காளை போன்ற தலைவனுடன் வலிமை வாய்ந்த வேங்கைப் புலிகள் மிகுந்த மலைகளை எல்லாம் கடந்து நின்மகள் சென்றாள் என்று சொல்வீராக என்று தலைவி கூறினாள். தலைவி தலைவனுடன் உடன்போக்கு மேற்கொண்டாள். நற்றாய் அவ்வுடன்போக்கினை உள்ளத்தில் மகிழ்ச்சியுடன் அறன் எனப் போற்றினாலும் தலைவி பாலை வழியாகச் சென்றதனை நினைத்து வருந்துகிறாள். அவை மட்டுமல்லாமல் தன் மகளானத் தலைவி நல்ல காதலனைப் பெற்றனளோ என்றெல்லாம் நினைக்கிறாள் என்பதை, மிளகினை உள்ளே இட்டு வைத்தாற்போன்ற சுவையை உடைய காய்ந்த கிளைகளைக்கொண்ட உகாய் மரத்திலுள்ள புல்லிய காய்களைத் தின்றபின் அத்தவற்றுக்காகப் புறா வருந்தும். அதுபோலத் தன் மகள் ஏதிலாளனின் மாய இன்பம் நல்லதெனக்கொண்டு சென்றதை நற்றிணை 66ஆம் பாடல் தாய் வருத்தப்படுவதைக் கூறுகின்றது. இதுபோன்று நற்றிணை 271ஆம் பாடல்வரிகளிலும் தன் மகளை நினைத்துப் புலம்புவதாக அமைந்துள்ளது. “புறநானூற்றில் இடம்பெற்றுள்ள மூதின் முல்லைப் பாடல்களும், அகத்திணைப் பாடல்களில் இடம்பெற்றுள்ள பெண்டிரின் திணைப்புனக் காவலும் தாய்வழிச் சமுதாயத்தின் எச்சங்களே ஆகும்”8 எனபார் பெ.மாதையன்.

**தலைவியின் தந்தை**

தலைவியின் தந்தையைப் பற்றிய குறிப்புகள் சிலவாகவே காணப்படுகின்றன. தந்தை தன்மகளைத் தகுந்த ஒருவனுக்கு மணம் புரிவித்தல் தந்தையின் கடமையாக இருந்து வருவது தமிழ்மரபு என்பதை ஐங்குறுநூற்றுப் பாடலில் நான் தலைவியை மணந்துகொள்ளாமல் இருந்த நாளில் நீயிர் இங்கு செய்து கொண்டிருந்த செயல் யாது? என்று தலைவன் வினவினான். அதற்குத் தோழி ‘எம் தலைவி நின்னைப் பார்த்த அன்றே நீ மணந்து கொண்டாய் என மனத்துள் எண்ணிக்கொண்டு ஒழுகினாள். அகன்ற நீர் நிலையில் அரும்புகள் பொருந்திய தாமரையை உடைய ஊரையுடையவன். தலைவியை விரைந்து மணந்துகொள்க என்றும், தலைவன் மணந்துகொள்ள வேண்டும் என வேண்டியபோது எம் தந்தையும் மறுக்காமல் கொடுப்பான் என்றும் நாங்கள் விரும்பி இருந்தோம் என்று கூறினாள். தலைவனுடன் சேர்ந்து வாழ்வதை நினைத்துத் தலைவியின் மனவளம் குறையாமல் மகிழ்ச்சியடைகிறது.

**நிமித்தம் பார்த்தல்**

எல்லாவற்றிற்கும் நேரம் காலம் வேண்டுமென்று அடிக்கடி சிலர் கூறுவதைக் கேட்டிருக்கிறோம். எல்லாச் செயலுக்கும் இடனறிதலும், காலமறிதலும் தேவை என்பது வள்ளுவரின் வாக்காகும். தம்மைச் சுற்றி நிகழும் நிகழ்வுகளின் அடிப்படையிலும் தமக்கு வரும் கனவுகளின் அடிப்படையிலும் எதிரேவரும் செயல்கள் எப்படி நடக்கும் என்று தீர்மானிக்கக்கூடிய மனிதர்களும் இருக்கிறார்கள். இதற்கு நிமித்தம் பார்த்தல் என்று பெயர். சங்கத் தமிழர்களிடத்திலும் நிமித்தம் பார்க்கும் மரபு இருந்திருக்கிறது. சுற்றி நிகழும் நிதழ்வுகளையும் கனவுகளையும் வைத்து அவை நல்லவை நடக்க உதவும் நிமித்தங்களா? அல்லது தீயவை நடக்கப் போவதை அறிவிக்கும் நிமித்தங்களா? என்பதைத் தீர்மானிக்கின்றனர். பெண்களுக்கு இடக்கண் துடித்தால், உடல் பூரித்து முன்கை வளையல் இறுகினால் நல்லது நடக்கப் போகிறது என்று பொருள். இதை,

**“மனைவயிற் பல்லியும் பாங்கொத்து இசைத்தன**
**நல்லெழில் உண்கணும் ஆடுமால் இடனே”** **(கலி.11:20-21)**
**“நுண் ஏர் புருவத்த கண்ணும் ஆடும்:**
**மயிர் வார் முன்கை வளையும் செறூஉம்**
………………..
**பெருங்கல் நாடன் வரும் கொல்”** **(ஐங்.218:34-35)**
**“அணிமாலைக் கேள்வற் தரூஉமார் ஆயர்**
**மணிமாலை ஊதுங்குழல்”** **(கலி.101:34-35)**
**“இடூஉ ஊங்கண் இனிய படூஉம்:**
**நெடுஞ் சுவர்ப் பல்லியும் பாங்கில் தேற்றும்**
**மனை மா நொச்சி மீமிசை மாச் சினை,**
**வினை மாண் இருங் குயில் பயிற்றலும் பயிற்றும்:**
**உரம் புரி உள்ளமொடு சுரம் பல நீந்தி,**
**செய்பொருட்கு அகன்றனர் ஆயினும் பொய்யார்**
**வருவர் வாழி தோழி”** **(நற்.246:1-7)**
**“மறுதரல் உள்ளமொடு குறுக, தோற்றிய**
**செய்குறி ஆழி வைகல் தோறு எண்ணி,**
**எழுதுசுவர் நினைந்த அழுதுவார் மழைக்கண்”** **(அகம்.351:9-11)**

என்றப் பாடலடிகளின் மூலம் நிமித்தம் பார்த்தலில் ‘கூடல் இழைத்தல்’ என்று ஒன்று இருக்கிறது. சுவரில் நாள்தோறும் கூடல் இழைத்துப் பார்த்து அழும் தலைவியைக் காட்டுகின்றன. கூடல் இழைப்பதாவது கண்ணை மூடிக்கொண்டு வட்டம் போட்டுப் பார்ப்பது ஆகும். ஓர் இடத்தில் வட்டம் போடத் தொடங்கி அது முடியும்போது, வட்டமாகப் போடத் தொடங்கிய இடத்தில் பொருந்தியிருந்தால் நினைத்தது நடக்கும் என்கிற நம்பிக்கை அக்காலத்தில் இருந்தது. இதை,

**“குன்றாது கூடுகெனக் கூறிமுத்த வார்மணல் மேல்**
**அன்றாங்கு அணியிழையாள் ஆழி இழைத்தாளே”**

எனவரும் சீவகசிந்தாமணி வரிகள், மணலில் கூடலிழைத்தல் நிகழ்ந்ததைச் சுட்டுகின்றன. மனிதர்கள் மட்டுமல்லாது விலங்குகளும் நிமித்தம் பார்க்கும் செய்தியினைக் கூறுகின்றது. பறவைகளும் சங்கால மக்களுக்கு நிமித்தங்களாகப் பயன்பட்டிருக்கின்றன. காக்கை கரைந்தால் விருந்து வரும் எனும் நம்பிக்கையை எடுத்துரைக்கிறது. உப்பு வணிகத்திற்காகப் புறப்படும் உமணர்கள், கீழ்த்திசையிலிருந்து மேல்திசை நோக்கிக் கிளம்புவதற்குமுன் புள்நிமித்தம் பார்ப்பதாக,

**“விருந்து வரக் கரைந்த காக்கை”** **(குறுந்.210:6)**
**“குருகும் இருவிசும்பு இவரும் புதலும்**
**வரிவண்டு ஊத வாய் நெகிழந்தனவே**
**சுரிவளைப் பொலிந்த தோளும் செற்றும்**
**வருவார் கொல் தோழி”** **(குறுந்.260:1-4)**

என்றப் பாடலடிகள் காட்டுகின்றன. குறுந்தொகைப்பாடலில், காலமல்லாத காலத்தில் நாரை வானத்தில் பறப்பதையும், பூவாத காலத்தில் பூக்கள் பூப்பதையும் நல்நிமித்தங்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. கன்று இல்லாத பசு எதிரே வந்தால் அது தீநிமித்தமாம். தீநிமித்தங்கள் என்பவை கனவில் காண்பவையாகவே சங்க இலக்கியம் சுட்டுகிறது. எட்டுத்திசைகளிலும் எரி நடசத்திரங்கள் எரிந்து வீழ்வது, பெரிய மரத்தின் காய்ந்த கிளைகளில் தீப்படித்துக் கொள்வது, சுடுகின்ற கதிரவனின் கதிர்கள் நெருங்கித் தோன்றுவது, கூகை கூவுவது, பற்கள் நிலத்தில் ஏறிவருவது, உடைகள் இழந்து நிற்பது போன்றவை கனவில் வந்தால் தீயவை நடக்கும் தீநிமித்தங்கள் ஆகும். சங்ககாலத்தில் இருந்து இன்றையக் காலம்வரை

மக்கள் செல்லும்போது நல்நிமித்தங்கள் நடந்தால் அவர்களின் மனம் மகிழ்ச்சியடையவும் தீமித்தங்களாக இருந்தால் அவர்களின் மனம் துன்பமடைவதாகவும் காணப்படுகின்றன.

**சிலம்புகழி நோன்பு**

சிலம்பு என்பது மகளிர் காலில் பூணும் அணியாகும். திருமணத்திற்குமுன் இவ்வணியைக் கழற்றுதல் மரபாகப் பேணப்பட்டிருப்பதை சிலம்புகழி நோன்பு உணர்த்துகின்றது. எனினும் பெண்கள் திருமணத்திற்குப் பின்னும் இவ்வணியை அணிந்திருந்தமையினைச் இலக்கியச் சான்றுகள் தெளிவுபடுத்துகின்றன. அவ்வணியை அழகு கருதி அணிந்திருந்தனரா அல்லது ஏதாவது குறியீட்டை உணர்த்து முகத்தான் பயன்படுத்தினரா என ஆராயும்பொழுது, இது பருவ மகளிரின் அணியாகத் திருமணத்திற்கு முன்னும் பின்னும் அணிந்திருந்தமையையே இலக்கியச் சான்றுகள் தெரிவிக்கின்றன. பெண்டிர் சிலம்பு பூண்ட நிலை ஆடவர் தழல் அணிந்த நிலையோடு ஒப்பிடத்தக்கதாக அமைகிறது. ஆடவர் கழல் அணிதல் பருவ வளர்ச்சியினை உணர்த்தும்நிலையிலும் மற்றும் வீரத்தின் அறிகுறியாகவும் பயன்பட்டதனைச் சான்றுகள் வாயிலாக அறியமுடிகின்றது. “மணம் புரிவதற்கு முன் மணமகளது காலில் பெற்றோர்களால் அணிந்திருந்த சிலம்பை நீக்குவதற்குச் செய்யப்படும் சடங்கு சிலம்புகழி நோன்பு எனப்படும்”[10] என்று மு.பி.பாலசுப்பிரமணியன் குறிப்பிடுகின்றார்.

**திருமணச் சடங்குகள்**

பண்டைத் தமிழகத்தில் ஆணும் பெண்ணும் தனியே சந்திப்பர். அன்பைப் பரிமாறிக்கொள்ளுவர். வாழ்க்கை உடன்படிக்கை செய்துகொள்ளுவர். அவர்கள் வாழ்நாள் முழுவதும் பிரியாமல் வாழ்ந்து இன்புறுவர். நாளாவட்டத்தில் இம்முறையினால் சில குற்றங்கள் தலைகாட்டத் தொடங்கின. ஆடவர்களிலே சிலர் வாக்குறுதியை மீறினர். காதல் மணம் புரிந்த மகளிரைக் கைவிட்டு வேறு பெண்ணை மணம்புரிந்தனர். அவர்கள் ஒழுக்கம் களவொழுக்கமாக இருந்ததால் ‘நான் அந்தப் பெண்ணுடன் வாழவில்லை, அவளை மணம்புரிந்து கொள்வதாக வாக்களிக்கவில்லை என்று பொய் சொல்லவும் தொடங்கினர். இந்நிலைமை ஏற்பட்ட பிறகுதான் பெரியோர்கள் திருமணத்திற்கான சடங்குகள் சிலவற்றை உண்டாக்கினர் என்பதை,

**“பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்**
**ஐயர் யாத்தனர் கரணம் என்ப”[11]**

என்ற தொல்காப்பிய நூற்பா எடுத்துக்காட்டுகிறது. சமுதாயத் தலைவர்களால் ஏறபடுத்தப்பட்ட திருமணச் சடங்குகள் யாவை என்பன அகநானூற்றுப் பாடல்களில் கூறப்படுகின்றன. நல்லநாளில் குளிர்ந்த பந்தல் பந்தலிலே புதுமணல் பரப்பப்பட்டிருந்தது பூமாலைகள் புனைந்து தொங்கிக் கொண்டிருந்தன. இரவு கழிந்து காலை நேரம் வந்தது. கல்யாணப் பந்தரிலே வரிசை வரிசையாக விளக்குகள் எரிந்துகொண்டிருந்தன. வயதேறிய நல்ல பெண்கள் தம் தலையிலே தண்ணீர்க் குடத்தை ஏந்தி நின்றனர். அந்த நீர்க்குடங்களை முன்னும் பின்னுமாக மாற்றி மாற்றிக் கொடுத்தனர். பிள்ளை பெற்ற நான்கு மாதர்கள் அந்த நீர்க் குடங்களை வாங்கி மணமகளை நீராட்டினர். நீராட்டுபோது ‘இவள் கற்பு தவறாமல் கணவனுடைய அன்புக்குரியவளாய் ஆகுக’ என வாழ்த்தினர். பின்னர் பெற்றோர் மணமகளை வாழ்த்தி, மணமகனிடம் கொடுத்தனர். அதன்பின் சுற்றத்தார் விருந்துண்டு மகிழ்ந்தனர். இதுவே திருமணமுறை ஆகும்.

ஆரம்பகாலத் திருமணச்சடங்கிலே புரோகிதம் இல்லை மந்திரம் இல்லை அக்கினி வளர்ப்பும் இல்லை தாலி கட்டப்பட்டதாகவும் தெரியவில்லை. மாதர்களே முன்னின்று மணவினைகளை நடத்தி வைத்தனர். பிற்காலத்தில் தாலிகட்டும் வழக்கம் உண்டாயிற்று. புலிப்பல்லைத் தாலியாகக் கட்டினர். இதன் பின் வேத விதிப்படி மணம் செய்யும் வழக்கமும் ஏறபட்டது. கடைச்சங்க காலத்திற்கு முன்பே வேத விதிப்படி மணம் செய்யும் வழக்கம் தமிழ்நாட்டில் தோன்றி விட்டது. “பிற்காலத்தில் வேத முறைத் திருமணமே பெருவழக்காயிற்று.

கோவலனுக்கும் கண்ணகிக்கும் நடந்த மணம் வேதமுறை மணம் காதல் மணம் அன்று பெற்றோர்கள் தங்கள் விருப்பப்படி தங்கள் செல்வ நிலைமைக்கு ஏற்றபடி செய்து வைத்த திருமணம்”[12] என்று ஞா.மாணிக்கவாசகம் குறிப்பிடுகின்றார். தமிழர்களின் திருமணம் படிப்படியாக மாறுதல் அடைந்துவந்திருப்பதைப் பண்டைய இலக்கியங்கள் எடுத்துக் காட்டுகின்றன. முதலில், அநாகரிக காலத்தில், வரையறையற்ற வாழ்க்கை் பின்னர் காதல் களவு மணம் அதன்பின் கற்பு மணம் பிறகு சடங்கு மணம் பின்னர் தாலி மணம்: பின்னர் வேதமணம் என்று மாறிக்கொண்டே வந்திருக்கின்றது.

**தலைவி மனைக்கு விளக்கு போன்றவள்**

கற்பு காலத்தில் தலைவி இல்லத்தைச் சிறப்புற அமைக்க வேண்டும். அந்தவகையில் தலைவி தன் மனைக்கு விளக்குப்போல் காட்சியளிக்கிறாள். பாண்டில் விளக்கு இருளைப்போக்கி வீடு முழுவதும் ஒளியைப் பரப்புவதுபோல் தலைவி தன்வீட்டின் பழி முதலிய மாசினைப் போக்கி மனைக்கு விளக்குப்போல் திகழ்கின்றாள். இதனை,

**“ஒண்சுடர்ப் பாண்டிற் செஞ்சுடர் போல**
**மனைக்கு விளக்கு ஆயினள் மன்ற” (ஐங்.405:1-2)**

என்றப் பாடலடிகள் மூலம் அறியமுடிகிறது. “இல்லறம் சிறப்பாக நடைபெற வேண்டுமானால் காதலனும் காதலியும் கருத்தொருமித்தவர்களாக வாழ வேண்டும். இத்தம்பதிகள்தாம் இல்லத்திலே இன்பங் காண்பர். இதுவே பழந்தமிழர் கருத்து”13 என்று சாமி.சிதம்பரனார் குறிப்பிடுகின்றார்.

**உண்மையான மனைவி**

உண்மையான மனைவி கணவன் செய்யும் சிறுபிழைகளுக்கெல்லாம் கடுங்கோபங் கொள்ளமாட்டாள். கணவன் செய்வது நன்மையாயினும், தீமையாயினும் அவற்றைப் பொறுத்துக் கொள்ளுவாள். காதலன் செய்யும் நன்மையைக் கண்டு மகிழ்வாள். தீமையைக் கண்டு பொறுமையிழக்காமல் அவனைத் திருத்த முயல்வாள். இதுவே ஒரு நல்ல மனைவியின் கடமை என்பதை,

**“உரவு நீர்ச்சேர்ப்ப**
**தாய் உடன்று அலைக்குங்காலையும் வாய்விட்டு**
**---------------------------**
**அன்னாய் என்னும் குழவிபோல**
**இன்னா செயினும் இனிது தலை அளிப்பினும்**
**நின்வரைப் பினள் என்தோழி**
**தன்உறு விழுமம் கலைஞரோ இலளே” (குறுந்.397:3-8)**

என்று தோழி தன் தலைவியைப் பற்றித் தலைவனிடம் கூறுவதுபோலப் பாடப்பட்டுள்ளது. சங்க இலக்கியக் காலத்தில் பெண்ணுக்கு உரிமையில்லை. “கணவனுக்குக் கட்டுப்பட்டவள்தான் மனைவி. கணவன் கொடுமைப்படுத்தினாலும் அவனுடன் கூடியிருந்துதான் அவள் வாழவேண்டும். இவளே உண்மையான மனைவி என்ற கொள்கைதான் குடிகொண்டிருந்தது”[14] என்று சாமி.சிதரம்பனார் குறிப்பிடுகின்றார்.

**முடிவுரை**

ஆதிமனிதன் தோன்றிய காலத்திலிருந்து மக்கள் இயற்கையோடு இயைந்த வாழ்க்கையைப் பின்பற்றி வாழ்ந்தனர். மனிதனின் காதல் உணர்வுகளுக்கு மிகச் சிறந்த பிண்ணனியாக அமைவது இயற்கைக் காட்சிகளாகும். தலைவன் தலைவியரின் உள்ளத்து உணர்வுகளை இயற்கை உணர்ந்து ஒன்றிவிட்டது போலவும், அவர்கள் துன்பப்படும்போது இயற்கையும் துவண்டது என்றும் மகிழும்போது இயற்கையும் மகிழ்ந்தது என்றும் நினைத்தார்கள். தலைவன் தலைவியின் களவு வாழ்க்கைக்கும் கற்பு வாழ்க்கைக்கும் இயற்கைப் பின்புலங்கள்

அமைந்துள்ளன. இன்றையக் காலகட்டங்களில் இயற்கையை அழித்துச் செயற்கை வாழ்க்கையை மக்கள் வாழ்ந்து கொண்டிருப்பதால்தான் சங்ககால மக்களின் உள்ளத்து உணர்வுகளை இன்று காணமுடிவதில்லை. பண்டைத் தமிழர்கள் அக, புறவாழ்க்கையைப் பற்றிச் சங்க இலக்கியங்கள் வழி விளக்கப்பட்டுள்ளது. அறத்தினால் பொருளும் பொருளால் இன்பமும் இன்பத்தால் வீடு பெற எண்ணுவதே மக்களின் எண்ணமாகும். வருங்காலத்தில் அகவாழ்க்கை கேள்விக்குறியாகவே ஆகிவிடும். புறவாழ்க்கை அரசியல் சார்ந்த வாழ்க்கையாக மாற்றியுள்ளது. காதலர்கள் களவு வாழ்க்கையிலே கற்பு வாழ்க்கையை வாழ்ந்து முடிகின்றனர்.

**குறிப்புகள்**

1. செ.மகேஸ்வரி, பரிபாடலில் சமூகம், ப.4.
2. மு.கருணாநிதி, திருக்குறள் கலைஞர் உரை, ப.65.
3. தொல்.பொருள்.இளம்.கற்பு.நூ.140.
4. சி.இலக்குவனார், இலக்கியம் கூறும் தமிழர் வாழ்வியல், ப.53.
5. மு.கருணாநிதி, திருக்குறள் கலைஞர் உரை, ப.12.
6. செ.மகேஸ்வரி, மு.நூ., ப.53.
7. சாமி.சிதம்பரனார், எட்டுத்தொகையும் தமிழர் பண்பாடும், ப.34.
8. பெ.மாதையன், சங்க இலக்கியத்தில் குடும்பம், ப.70.
9. திரு.பொ.வே.சோமசுந்தரனார், சீவகசிந்தாமணி முதல் பாகம், ப.593.
10. மு.பி.பாலசுப்ரமணியன், மு.நூ., ப.33.
11. தொல்.பொருள்.இளம்.களவு.நூ.143.
12. ஞா.மாணிக்கவாசகம், சிலப்பதிகாரம், ப.18
13. சாமி.சிதம்பரனார், மு.நூ., ப.47.
14. மேலது, ப.48.